ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி






40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 2014

மலர் - 46 இதழ் - 09

• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.

## உள்ளே....



அன்புடன் உங்களோடு ................ 01
மனிதனை மதிப்பது ...................... 02
பிறப்பும் இறப்பும் ........................... 03
மாணவர் பக்கம் .......................... 04
மனித உரிமைகள் ஆண்டு .......... 05
புனிதர்களை அறிவோம் .............. 07
இலக்கிய மஞ்சரி ........................... 09
கடுகுக் கதை ................................... 10
நம்பிக்கை ......................................... 11
தீர்க்க தரிசனங்களின் நிலம் ...... 13
எண்ணிப்பார்க்கையில் ................ 14
தொண்டனின் சில நிமிடங்கள் .... 15
நற்றிணை (35) காட்டும் .............. 17
வலி ................................................... 18
வாடகை வீடு .................................. 19
வீட்டு மருத்துவம் .......................... 19
நம்பிக்கை கொள் ......................... 22
பாடசாலை விளையாட்டுப் ........... 23
உறுப்பு மாற்று சிகிச்சை ............... 24
திரை விமர்சனம் ........................... 25
விவிலியம் கற்போம் ..................... 27
அறிவை வளர்ப்போம் ................... 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....!

உயிர்ப்பில் முடியா இறப்பு இல்லை
வாழ்வைத் தராத சாவு இல்லை
நம்பிக்கை தனையே நம்மில் கொண்டால்
இறப்பை வெல்வோம் வாழ்வைப் பெறுவோம்!

நியூட்டன் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளுள் ஒருவர். ஒருநாள் ஒருவன் நியூட்டனைப் பார்த்து, "இறந்தவர்கள் உயிர்பெற்று எழுவார்கள் என நம்புகிறீரா" என்று கேட்டானாம், அவர் "நம்புகிறேன்" எனப் பதிலளித்தார். "அது எப்படி, நாம் அவர்களை (இறந்தவர்கள்) அடக்கம் பண்ணுகின்றோம். அவர்கள் உடல்கள் எல்லாம் அழிந்ததும் எப்படி அவர்களால் பழைய உடலைப் பெறமுடியும்" என்று அம்மனிதன் கேட்டான். அதற்குப் பதிலாக நியூட்டன் சில இரும்புத் துகள்களை மண்ணுடன் கலந்துவிட்டு அம்மனிதனிடம், 'அது இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துத் தரும்படி' கேட்டார். அவனால் அதைப் பிரித்துக் காட்ட முடியவில்லை. நியூட்டன் ஒரு காந்தத்தை எடுத்து மண்மீது பிடிக்க, கலந்திருந்த இரும்புத் துகள்கள் அனைத்தும் அதன்மீது ஒட்டிக்கொண்டன. "இச் சிறிய காந்தத் துண்டுக்கே இவ்வளவு சக்தி என்றால் நம்மைப் படைத்த கடவுளுக்கு எவ்வளவு சக்தி இருக்கும். அவர் நம் அனைவரையும் வாழ வைப்பார்" என நியூட்டன் அம்மனிதனுக்குப் பதில் கொடுத்தார்.

கடவுளின் வல்லமை ஒருநாள் மண்ணில் மடிந்து கிடக்கும் மனிதர்களையெல்லாம் உயிர்ப்பிக்கும். இந்த உண்மையை ஏற்றுக்கொள்பவர்களை மரணம்கூட ஒன்றும் செய்யமுடியாது. நம் கடவுள் இறந்தோரின் கடவுளல்ல, வாழ்வோரின் கடவுள்.

"இலையுதிர் காலம் என்பது மரணமல்ல
இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம்.
அஸ்தமனம் என்பது மறைவு அல்ல,
இன்னோர் உதயத்திற்கான பதுக்கம்"
என்கிறார் கவிஞர் வைரமுத்து.

கூட்டுக்குள் இருக்கும் புழு – வண்ணத்துப் பூச்சி கூட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது அந்தக் கூட்டை உடைத்து மறுவாழ்வைச் சுவைக்கின்றது. வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் எல்லையிடும் ஓட்டைப்பற்றி ஓடு உடைகிறதே என்று கோழிக்குஞ்சு வருத்தப்படுவதில்லை. அதன் அடுத்தகட்ட வாழ்வைச் சுவைக்க அது முன்னேறுகின்றது. மனிதனோ, இந்த உலக வாழ்க்கைக்குப் பின் மறுவாழ்வு உண்டு என்று இருந்தும் கூட அவன் அதை எண்ணிக் கவலைப்படுகிறான்.

சாவைக் கண்டு மனிதன் கவலைப்படவும், பயப்படவும் காரணம், தன்னை அன்பு செய்தவர்களையும் தாம் அன்பு செய்தவர்களையும் பிரிந்துவிடுவோம் என்ற எண்ணமும் வரப்போகும் வாழ்வு எத்தகையதாக இருக்குமோ என்ற அச்சமுமே!

"நீங்கள் யாரும் இறந்துவிடவில்லை; மற்ற மனிதர்களை உண்மையாக அன்புசெய்த யாரும் முழுவதும் இறந்துவிட முடியாது"
என சொப்பரினோ கூறுகின்றார்.


விண்ணக வாழ்வை மண்ணக வாழ்வின் நிறைவாகவே பார்க்கின்றோம்.

நாம் வாழும் வாழ்க்கை எப்படிப்பட்டதாக உள்ளது...? பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் நாம் படும் பாடுகள்தான் எத்தனை எத்தனை....!

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா,
ஆறடி நிலமே சொந்தமடா"
எனத் திரைப்படப் பாடல் சொல்கிறது.

மண்ணகத்துக்குரிய செல்வங்களைச் சேர்க்காமல், விண்ணகச் செல்வங்களைச் சேர்த்துவைப்போம். பணம், பதவி, பட்டம், அன்பற்ற நிலையைக் களைந்து எம் மறு வாழ்வுக்கு இப்போதே ஆயத்தம் செய்ய முன்வருவோம். உடலின் உயிர்ப்பும், மறுமை வாழ்வும் உண்டு என்பது எம் விசுவாசக் கோட்பாடாகும். விண்ணகம் என்பது இவ்வுலகில் உள்ள அனைத்து இன்ப துன்பங்களையும் தாங்கிக் கொண்டு பகிர்ந்து வாழ்வதாகவும் உறவுக்கு அர்த்தம் கொடுப்பதாகவும் அமைதல் வேண்டும். நம்பிக்கையோடு வாழ்ந்தால் மறுமை உண்டு. நம் கடவுள் வாழ்வோரின் கடவுள்.

— ஆசிரியர் —




"சாவினால் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி
அழிக்கப்படுவதில்லை"
(1 கொரி 15:5)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனிதனை மதிப்பது



இவ்வாண்டு மனித உரிமைகள் ஆண்டாக எமது மறை மாவட்டத்தில் சிறப்பிக்கப்படுகிறது. மனிதன் மாண்பு மிக்கவன். மகத்துவம் கொண்டவன். படைப்புகளிலே உயர்நிலையிலும் உருவாக்கப்பட்டவன். படைத்தவன் சாயலிலும், பாவனையிலும் படைப்புகள் அனைத்தையும் தனக்குக் கீழ்ப்படுத்தி ஆண்டு அனுபவித்திட அருள்பெற்றவன் - இறை வரம் பெற்றவன்.

விண்ணை-மண்ணை-ஆழ் கடலை அங்கு உயிர் வாழும் எல்லா உயிரினங்களையும் தனது ஆற்றலுக்கு உட்படுத்தவும், ஆண்டிடவும் கடவுளால் உரிமை பெற்றவன்தான் மனிதன். ஆனால், கடவுளின் சாயலிலும் பாவனையிலும் படைக்கப்பட்ட அடுத்த மனிதனை அடக்கியாளவோ - ஒடுக்கி அதிகாரம் செய்யவோ - ஆற்றலுக்கு உட்படுத்தவோ வேறு எவருக்கும் எந்தவித அதிகாரமும் யாராலும் அளிக்கப்படவில்லை.

'நமக்கு நமது கரங்களை நீட்ட உரிமையுண்டு. ஆனால், அடுத்தவர் மூக்கின் நுனி வரையுமே அது நீட்டப்பட முடியும்' என்று கூறப்படுவதிலிருந்து அடுத்தவர் நமது தொடுகைக்கு அப்பாற்பட்டவர் என்பது புலனாகின்றது அல்லவா.....?

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் என்று தொடக்க நூல் 1:27ல் கூறப்படுகின்றது. தொடர்ந்து 1:28ல் "கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

இவ்வாறு ஆசி வழங்கிய கடவுள், எந்தச் சந்தர்ப்பத்திலும் அடுத்த மனிதனை உங்கள் ஆற்றலுக்குள் உட்படுத்துங்கள் என்றோ உங்களுக்குக் கீழ்ப்படிய வையுங்கள் என்றோ கூறவில்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் அதே கடவுளது உருவிலும், சாயலிலும், பாவனையிலும் பூரண உரிமையுள்ள மனிதனாகப் படைக்கப்பட்டவன் என்ற காரணத்தாலும், சுதந்திரமுள்ள முழு மனிதனாக அவன் உருவாக்கப்பட்டதினாலும் ஆகும்.

அடுத்த மனிதனை அன்பு செய்து விடு; மன்னித்துவிடு; வறுமையில் வாடினால் போஷித்து விடு; அவன் உன் உள்ளாடையை எடுக்க விரும்பின் அவனுக்கு உன் மேலாடையையும் வழங்கிவிடு;




**மனித உரிமைகளை மதிப்பதாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பி றப்பும் இ




கேட்பவனுக்கு இல்லை எண்ணாதே; இரப்பவனுக்கு உன் முகத்தைத் திருப்பாதே; என் சகோதரர் ஒருவருக்கு என் பெயரால் ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுத்தாலும் கைமாறு பெறாமல் போகமாட்டீர்கள் என்றெல்லாம் கூறிய இயேசு அடிமைப்படுத்து, அடக்கியாள், வருத்து, துன்புறுத்து என்றெல்லாம் கூறி வைக்கவில்லை ஏன்? கடவுளின் சாயலில் நீங்களும் நானும் படைக்கப்பட்டிருக்கும்போது, நாம் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் ஆகின்றோம். எனக்கு அடுத்திருப்பவன் என் சகோதரன். அந்தச் சகோதரனுக்கு இயேசு ஆண்டவர் சகோதரர். அந்த இறைமகனுக்கு நீங்களும் நானும் சகோதரர் ஆகிவிடும் போது யார் யாரை அடக்கியாள்வது? அன்பு காட்டி பரிவு கொள்வதல்லவா சகோதரச் சிறப்பு?

செய்யும் தொழிலே தெய்வம். தொழில் செய்தே உண்ண வேண்டும். தொழிலாளியின் கூலியை விடியும்வரை உன்னிடத்தில் வைத்திருக்காதே! உன் பணத்தை வட்டிக்குக் கொடாதே! அடுத்தவரைச் சுரண்டாதே! இவற்றையெல்லாம் வாழ்வில் பற்றிக்கொண்டால் மனித மாண்பு மிளிருமல்லவா...? உறவுகள் வளருமல்லவா? இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையுமானவள். நாம் இருவரல்ல ஒருவர். ஒரே உடல் என்ற சிந்தனை கணவன் மனைவிக்குள் ஏற்பட்டால் குடும்ப வன்முறை ஏற்படத்தான் கூடுமா....?

**ஒவ்வொரு பிறப்பும் கற்றுக்**
**கொள்ள வருகிறது**
**ஒவ்வோர் இறப்பும்**
**கற்றுத் தந்து**
**போகிறது**
**இயல்பான மரணம்**
**மூன்று நிலைகளைத்**
**தாண்டுகிறது**
**உறுப்புகள் மருந்துகளால்**
**இயங்குவது இரண்டாம் நிலை**
**உறுப்புகள் இயந்திரங்களால்**
**இயங்குவது மூன்றாம் நிலை**
**உறுப்புகள் இயந்திரங்களால்**
**இயங்கத் தொடங்கிவிட்டால்,**
**மரணம் பெரும்பாலும் வார்டுக்கு**
**வெளியே வராண்டாவில் நிற்கிறது**
**என்று பொருள்**
**சிறுநீரகம் செய்த வேலையை**
**இயந்திரங்கள் செய்யத் தொடங்கியபோதே**
**நம்பிக்கையில் பாதி நசிந்து போனது**


- கவிஞர் வைரமுத்து -



ஜே. பத்திநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## போர்த்துக்கேயரின் இலங்கை வருகை (1505)

இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்ட நிலைகளை நிர்வகிக்க பேரரசர் டொம் மனுவல் 1505ல் டொம் பிரான்சிஸ்கோ என்பவரைத் தம் முதற் பிரதிநிதியாக அனுப்பி வைத்தார். அவர் பேரரசரின் அதிகாரத்தைச் செயற்படுத்த கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப, கீழைத்தேய நாடுகளின் பேரரசை விஸ்தரிக்கவுமென இலங்கை, மலாக்கா, பர்மா போன்ற நாடுகளுக்கும் தம் படைகளைச் செல்லு மாறு பணித்தனர். போர்த்துக்கேயப் படைகள் இலங்கை செல்வதற்கு விரைவில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மலாக்கா, செங்கடல், பாரசீக வளை குடாவிற்கு இடைப்பட்ட தம் கடல்வழி வர்த்தகப் பயணங்கள், போர்த்துக்கேயரால் தடைசெய்யப் பட்டமையால் முஸ்லீம்கள் மாலைதீவு வழியாக தம் வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டுவரும் செய்தி பேரரசரின் பிரதிநிதி டொம் பிரான்சிஸ்கோ வுக்குக் கிடைத்தது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த தம் மகன் டொம் லொறென்சோ டி அல்மெய்டா தலைமையில் 9 கப்பல்கள் கொண்டதொரு படையை அனுப்பி வைத்தார்.

இப்படைக்கு ஆன்மீகக் குருவாக பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த பிறே விசென்ற் சென்றார். படைக்கப்பல்கள் ஒரு பெரிய புயற் காற்றில் சிக்கிக்கொண்டன. எனவே, டொம் அல்மெய்டா மாலைதீவுப் பயணத்தைக் கைவிட்டு திருப்பிப் போக நினைத்தார். இருந்தும் ஆன்மீகக் குருவிடம் ஆலோசனை கேட்டும், அவர் உடனடி யாகத் தீர்மானங்கள் எடுக்கவேண்டாமெனக் கூறியதற்கிணங்க, அடுத்தநாள் காலைப் பூசைப் பலி செலுத்துமுன் போவதா, திரும்புவதா என்ப தைத் தீர்மானிக்க ஒரு பேப்பரில் இரு துண்டுகள் எழுதி, பூசைக் கல்லின் கீழ் வைத்தார். பூசையின் பின் பார்த்த பின்னர் இரு துண்டுகளும் அங்கு காணப்படவில்லை. எனவே இறைசித்தமெது வென முடிவெடுக்க முடியாமல் கப்பல்களை காற்றோடு போகவிடும்படி கேட்டுக்கொண்டனர்.

இதனால் கப்பல் தென்கிழக்குத் திசையாக காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு இலங்கையின் தென்மேற்குத் துறையை அடைந்தனர். பின்னரே அது கொழும்புத் துறைமுகமெனக் கண்டு கொண்டனர். இவ்வாறு எதிர்பாராதவிதமாய் 1505.11.15ல் இலங்கையில் முதல்முறை காலடி பதித்தனர்.

இவ்வாறு இவர்கள் இறங்கியதைத் தலைநகர் கோட்டையிலிருந்த சிங்கள மன்னன் 9ம் பராக்கிரமபாகு கேள்விப்பட்டான். வெள்ளை நிறத் தோல் கொண்ட ஓர் அழகான இன மக்கள் இரும்புக் கவசங்களும், தலைப்பாகையும் அணிந்தவர்களாய் ஒரு நிமிடமும் ஓய்ந்திருக்காது உலாவித் திரிவதைக் கேள்விப்பட்டு இவர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பித் தம் தூதரை அனுப்பி உடன்படிக்கை செய்துகொண் டான். இதன் விளைவாக பரஸ்பர நட்பும் வர்த்தக மும் செழிப்புற்றது. ஆண்டுதோறும் கப்பமாய் ஒருதொகை கறுவா கொடுப்பதாயும், போர்த்துக் கேயர் தம் துறைமுகங்களைப் பகைவரிடமிருந்து பாதுகாப்பதாயும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்தினத்திலேயே இலங்கைத் திருச்சபைக்கும் அத்திவாரமிடப்பட்டது. அரசரின் அனுமதியுடன் லொறன்ஸோ திருச்சிலுவையையும், போர்த்துக்

06ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மனித உரிமைகள் ஆண்டு நிறைவு விழா





மட்டக்களப்பு மறைமாவட்டம் 2014ம் ஆண்டை மனித உரிமைகள் ஆண்டாகப் பிரகடனஞ் செய்திருந்தது. இதற்கேற்ப இவ்வாண்டில் அது பல்வேறு வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. திருவிழாக்கள், திருவழிபாடுகள், மறை உரைகள் அனைத்திலும் மறைமாவட்ட அளவில் "மனித உரிமைகள்" என்னும் கருப்பொருள் உள்வாங்கப்பட்டிருந்ததை அவதானிக்கலாம். இவைகளை விட மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள், கவிதை, கட்டுரை, சிறுகதை, குறும்படப் போட்டிகள் என்பனவும் நடத்தப்பட்டிருந்தன. இவைகளினூடாக பலதரப்பினர் மத்தியிலும் மனித உரிமைகள் தொடர்பான கருத்துகளும், விழிப்புணர்வும் விதைக்கப்பட்டுள்ளன என்று துணிந்து கூறமுடியும்.

உரிமை வாழ்வு என்பது மனிதனின் ஏக்கம், எதிர்பார்ப்பு, இலட்சியம் என்று கூறலாம். மனித மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும், நிறைவும், மதிப்பும் உரிமை வாழ்வில்தான் உண்டு. ஆகவேதான் உரிமை வாழ்வுக்காக உலகம் பேசிக்கொண்டே இருக்கிறது; போராடிக் கொண்டே இருக்கிறது. இந்தப் போராட்டம் என்பது மானுட வாழ்வில் முடிவுறாத போராட்டம் என்பது மட்டும் உண்மை.


இம்முடிவுறாத போராட்டத்துக்கு மனித உரிமைகள் ஆண்டும், அது தொடர்பான நிகழ்வுகளும் மேலும் வலுச் சேர்த்துள்ளன என்பது உண்மை.

மனித உரிமைகள் ஆண்டின் நிறைவு விழாக்கள் மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் மறைக் கோட்ட ரீதியாக நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடந்த ஒக்டோபர் மாதம் 8ம் திகதி மட்டக்களப்பு மறைக்கோட்டத்திலும் 11ம் திகதி கல்முனை மறைக் கோட்டத்திலும் நடை பெற்றன.




மட்டக்களப்பில் அன்னை மரியாள் பேரால யத்தில் ஆயர் தலைமை யில் மறைமாவட்டக் குருக் கள் ஒன்றிணைந்து நிறை வேற்றிய கூட்டுத் திருப்பலி யைத் தொடர்ந்து புனித செசிலியா பெண்கள் மகா வித்தியாலய அரங்கில் நிறைவுவிழா நிகழ்வுகள் அரங்கேறின. ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக அக்கறைப்பற்று மாவட்ட நீதிபதி கௌரவ A.G. அலெக்ஸ்ராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மட்.மறைக்கோட்ட முதல்வர் அருள் தந்தை ஜே.எஸ். மொறாயஸ் அவர்கள் வரவேற் புரை வழங்கினார். உரைகள், கலை நிகழ்வுகள், மறைமாவட்ட அளவில் மனித உரிமைகள் தொடர் பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளிலும் வென்றோ ருக்கான பரிசளிப்புகள் என நிறைவுற்றது.

கல்முனையில் திருஇருதயநாதர் ஆலயத் தில் ஆயர் தலைமையில் நடைபெற்ற நன்றித் திருப்பலியுடன் ஆரம்பித்த நிறைவுவிழா நிகழ்வுகள் தொடர்ந்து திருஇருதயநாதர் அரங்கில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரின் தலைமை யில் நடைபெற்ற இவ் விழா வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் K. விமல நாதன் கலந்துகொண்டு சிறப் பித்தார். கல்முனை மறைக் கோட்ட முதல்வர் அருள் தந்தை G. அம்புறோஸ் அவர்கள் வரவேற்புரை வழங் கினார். சர்வமதப் பிரதிநிதிகள் ஆசிச் செய்திகள் வழங்கினர். கலை நிகழ்வுகள், பரிசளிப்பு கள், சிறப்புரைகள் என்பவற்றோடு விழா நிகழ்வுகள் முற்றுப்பெற்றன.

விழாவின் சிறப்பம்சமாக மறுநாள் (12.10.2014) தமது பிறந்தநாளை நினைவுகூரும் ஆயர் அவர்களுக்கு அனைவரும் வாழ்த்துகளைக் கூறி மகிழ்ந்தனர்.

**விழாக்கள் முற்றுப்பெறலாம். விழாக்க ளின் மூலம் விதைக்கப்பட்டவைகள் முளைத் தெழ வேண்டும். அது நமது சிந்தனையில், வாழ்வில், சமூகத்தில் பயன்தர வேண்டும் என்பதே மனித உரிமைகள் ஆண்டின் எதிர் பார்ப்பாகும்.** ■

**மாணவர் பக்கம் .....**

கேயச் சின்னத்தையும் பாறையில் பொறித்து வைத் தான். அதுமட்டுமல்லாமல் தம் பெயர்கொண்ட புனித லவுறேஞ்சியாரின் சிற்றாலயமும், அதை யடுத்து ஒரு வர்த்தகக் களஞ்சியமும் கட்டினான். இச்சிற்றாலயத்தில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த வின்செனற் அடிகளார் இலத்தீன் மொழியில் முதல் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார். இவ்வாறு போர்த்துக்கேயர் இலங்கையைக் கண்டு பிடித்த செய்தி பேரரசர் வழியாக பாப்பு இரண்டாம் யூலியசுக்கும் கர்தினால்மாருக்கும் அறிவிக்கப்பட்டு இச்செய்தியானது உரோமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாறு போர்த்துக்கேயரின் இலங்கை விஜயம் இடம்பெற்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




– மற்றில்டா இராஜேந்திரம் –

**கார்த்திகை 03ம் திகதி : புனித மார்ட்டின் டி போரஸ் :**



**1579**ம் வருடத்திலே 'பெரு' நாட்டின் லிமா எனும் நகரில் இவர் அவதரித்தார். இவர் தந்தை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த நேர்மையாளர். தாயோ பனாமா நாட்டைச் சேர்ந்த செவ்விந்தியப் பெண்மணி. பதினைந்தாவது வயதிலே இவர் லிமாவிலுள்ள டொமினிக்கன் சந்நியாசிகள் இல்லத்தில் சகோதரராக இணைந்து, தன் வாழ்நாள் முழுவதும் ஒரு முடி திருத்துபவராகவும், பண்ணை வேலையாளாகவும், கிடைப்பவற்றைப் பகிர்ந்தளிப்பவராகவும் பணி புரிந்தார். இவர் அடி மனதில் வெளிநாடுகளுக்கு, மறை நாடுகளுக்குச் சென்று தியாகங்கள் புரியவேண்டுமென்ற ஒரு பெரும் ஆவல் இருந்தது. இது சாத்தியமாகாது போகவே, பல தண்டனைகளைத் தமக்குத் தாமே வழங்கித் தம் உடலை அவற்றுக்கு உட்படுத்தினார். இவற்றால் இவர்பால் ஈர்க்கப்பட்ட இறைவன் இவரை மகிமைப்படுத்தி, அற்புதமான கொடைகளால் நிரப்பினார். இவர் உயிர்கள் மீது அன்பு மீதூரப் பெற்றவர் என்று சொன்னால் ஈடாகாது. காரணம், இவருக்கு ஆறறிவு படைத்த மனிதரும், ஐந்தறிவு படைத்த விலங்குகளும், சிறு ஜந்துக்களும் கூட சரி சமமாக இருந்ததுதான். அனைத்தையும் பராமரிக்கும் வைத்தியசாலையாகத் தன் சகோதரியின் வீட்டைப் பயன்படுத்தினார். ஆன்மீக ஞானத்தை இவர் பெற்றிருந்தார். சகோதரியின் திருமணப் பிரச்சினைகளையும், அண்ணனின் மகளுடைய வாழ்க்கைப்

## மட்டக்களப்பு மறை மாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு – 2015

**ம**ட்டக்களப்பு மறை மாவட்டத்தின் அடுத்த ஆண்டுக்கான மேய்ப்புப்பணி திட்டமிடல் மாநாடு இம்மாதம் எட்டாம் திகதி *(2014.11.08)* மட். மன்றேசா தியான இல்லத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 07.30 முதல் மாலை 5.00 மணிவரை மாநாட்டு நிகழ்வுகள் இடம்பெறும். எதிர்வரும் ஆண்டை 'துறவற வாழ்வு' ஆண்டாக திருத்தந்தை பிரகடனஞ்செய்துள்ள நிலையில் அதன் அடிப்படையில் மாநாட்டு நிகழ்வுகள், தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என மட்.மறைமாவட்ட மேய்ப்புப்பணிச்சபை செயலாளர் திரு.G.J. சாந்தகுமார் தெரிவித்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தார். அவை மட்டுமல்ல தனது சபையினர் கற்பதற்கு இலகுவாக இறையியல் பிரச்சினைகளையும் தீர்த்து ஆயர்களுக்கு உதவி புரிந்தார். புனித லிமாவின் ரோசுக்கு நெருங்கிய நண்பருமாக இருந்தார். இவர் 1639ம் வருடம் கார்த்திகைத் திங்கள் மூன்றாம் நாளன்று இறையடி சேர்ந்தார். 1962ம் வருடம் வைகாசித் திங்கள் ஆறாம் நாளில் புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எதிர்வரும் 2015ம் ஆண்டு ஜெனவரித் திங்கள் 13ம் நாள் இலங்கை நாட்டுக்கு வரவுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன. அதே வேளை எதிர்வரும் ஜெனவரித் திங்களில் ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் காலச் சூழ்நிலையில் திருத்தந்தை எந்த நாட்டுக்கும் விஜயம் செய்வதில்லை எனவும் திருத்தந்தையின் வருகையை அரசியலாக்க முடியாது எனவும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் உயர்பீடம் தெரிவித்துள்ளது. தேர்தல் முடிந்து ஒரு மாதத்தின் பின்தான் திருத்தந்தை இலங்கைக்கு வருவார் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை ஒரு சந்திப்பின் போது கருத்து வெளியிட்டுள்ளார். இந்நிலையில் வருமாண்டு ஜெனவரித் திங்களில் திருத்தந்தையின் வருகை இடம்பெறுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.




**கார்த்திகை 04ந் திகதி : புனித சாள்ஸ் பொரோமியோ:**



இவர் இத்தாலிய நாட்டு மக்கியோர் ஏரிக்கரையில் 1538ம் வருடம் பொரோமியோவின் பிரபுக்கள் குடும்பத்தில் உதித்தார். மிலான் தேசத்தில் கல்வி பயின்றார். பின் பாவியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கற்றார். 1559ம் வருடம் குடியியல் மற்றும் திருச்சபைச் சட்டத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். இவரது மாமா கருதினால் டி மெடிசி இதே வருடம் பாப்பரசராகத் தெரியப்பட்டு, 4ம் பத்திநாதர் என அழைக்கப்பட்டார். இவர் சாள்சைக் கருதினாலாக உருவாக்கிக் குறுகிய காலத்தில் இவரை மிலான் தேச அதிமேற்றிராணியாராகவும் நியமிக்கையில் இவருக்கு வயதோ இருபத்திரண்டு மட்டுமே! அதேவேளை பாப்பரசரால் உரோமில் இவர் தங்கவைக்கப்பட்டார். காரணம் ஊக்கமும் ஆர்வமும் கொண்டதொரு கத்தோலிக்கத் திருச்சபையை உருவாக்குவதாகும். எனவே, இவர் கத்தோலிக்கத் திருச்சபையின் இலக்கியத் தொழிற்பாட்டுக்கு உதவியாக வத்திக்கான் கல்வி நிலையத்தை உருவாக்கினார். பாப்பரசரின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்ததனால், 1562ம் வருடம் கூட்டப்பட்ட திரித்தெந்து சங்கத்தை ஒழுங்குபடுத்தும் பணி இவருடையதானது. பின்னர் சங்கத்தின் தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் அக்கறை கொண்டு உழைத்து சங்கத்தின் கற்பித்தல்களை உள்ளடக்கிய உரோமன் மறைக்கல்வியை உருவாக்கினார். இவர் தம் பணிகளைக் கௌரவத்திற்காக மட்டும் அல்லது வருமானத்திற்காக மட்டும் செய்யவிரும்பவில்லை. 1564ம் வருடத்தில் பாப்பரசர் மரணப்படுக்கையில் இருந்த வேளையில் அவருக்கு உதவியாயிருந்து, அவரது மரணத்தின் பின் பாப்பரசர் தேர்தலில் 5ம் பத்திநாதர் தெரிவானதும் மிலான் நகருக்குச் சென்றார். 1572ம் வருடத்தில் 13ம் கிரகறி பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1575ம் வருடத்தில் மிலான் தேசத்தில் ஏற்பட்ட மாபெரும் நெருக்கடி நிலைமையில், இவர் தன் தியாகங்களாலும், சிறந்த தலைமைத்துவத்தாலும் செயற்பட்ட விதம் இவரை ஒரு நல்ல ஆயனாகக் காட்டின. கத்தோலிக்கத் திருச்சபை எனும் வானிலே ஒளிவீசிய இம் மாபெரும் ஜோதி 1584ம் வருடத்தில் அணைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மஞ்சரி

- ஆழியான் -

தொன்று தொட்டு இன்று வரை மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்கின்றான். இயற்கையின் மாறுதலுடன் மனித வாழ்க்கை முறைகளும் மாறுதலடைகின்றன. இயற்கையோடிணைந்து மனித வாழ்விலும் நம்பிக்கை தோன்றலாயின. பழங்குடி மக்களின் சமுதாய வாழ்வினை நோக்கினால் இவ்வுண்மை விளங்கும். கி.பி. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஆசாரக் கோவை' மூலம் பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறியலாம்.

தொல்காப்பியத்திலே 'நாளும், புள்ளும் பிறவற்றி னிமித்தமும்' (தொல். பொருள் –91) எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'புள்' என்பது முன்னர் பறவையை மட்டும் குறிப்பிட்டது; பிற்காலத்தில் சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை 'வாய்ப்புள்', 'பறவாப் புள்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

'கூகை அலறினால் சாவு வரும்'

என்ற நம்பிக்கை தமிழரிடையே இன்றும் உள்ளது. இதனைப் புறநானூறு பின்வருமாறு சொல்கின்றது.

'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்'

(புறம் 280)

'காகம் கத்தினால் விருந்தினர் வருவர்' என்பதும் நம்பிக்கை.

''மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாற'

(குறுந்தொகை 391)

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும்போது காகம் இடப்பக்கம் இருந்து வலப்பக்கம் சென்றால் நல்லது என்றும் கூறுவர்.

கனவு காணல், பல்லி சொல்லுதல், கண் துடித்தல் பற்றிய நம்பிக்கைகளையும் காண்கின்றோம். தலைவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவிக்குக் கண் துடித்தால் தலைவன் விரைவில் வருவான் என்ற நம்பிக்கையும் உண்டு.

''நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே''

(கலித்தொகை - 11)

''நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்''

(ஐங்குறுநூறு - 218)

அடியார்க்கு நல்லார் 'கனா நூல்' பற்றியும் குறிப்பிடுகின்றார். இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவதையும் இன்றும் அறிவோம். திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும் 'யோசேப்' கனவுகளுக்கு விளக்கம் சொல்வதையும் நாம் காணலாம்.

தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையையும், சங்க இலக்கியங்களில் காண்கின்றோம்.

''சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து
ஒள்ளிய தும்மல் வரும்''

(ஐந்திணை எழுபது - 40)

யாரும் தும்மினால் 'நூறு' என்று சொல்வதுண்டல்லவா... 'நூறாண்டு வாழ்க' என்பது அதன் பொருள்.

நல்ல காரியங்களைப் பேசிக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## கடுகுக் கதை 60

# ப(ற)ரந்த மனம்

- பர்ரி -

அன்ரனின் வீட்டிற்கு அயலவர்கள் சாம் குடும்பத்தினர். அவர்களின் வீட்டுக் காணியின் அளவு 10 பேர்ச். அவர்களின் வளவுக்கு அடுத்தடுத்தாக 10 பேர்ச்சுகள் கொண்ட மூன்று வெற்றுக் காணிகள் உள்ளன. சாம் அவர்களின் மனைவி, மீன் கழுவிய தண்ணீர், வெடுக்குகள், பிழிந்த தேங்காய்ப்பூ, மரக்கறிக் கழிவுகள், பழஞ்சோறு என்பனவற்றையெல்லாம் பக்கத்து வளவிற்குள்தான் ஊற்றுவார். அன்ரனின் வீட்டாருக்கு 'நாற்றம்' சங்கடம்தான்.

இதற்கிடையில் 'சாம்' பக்கத்து 10 பேர்ச்சையும் வாங்கிப்போட்டுவிட்டார். இப்போது சாமின் மனைவி கழிவுத் தண்ணீரை தாங்கள் வாங்கிய காணிக்குள் ஊற்றுவதில்லை. ஆனால், மூன்றாவதாக உள்ள வெற்றுக் காணிக்குள்தான் ஊற்றுகிறார்.

அன்ரனின் மகன் கூறினான்,

"தங்கட காணிக்குள் புதைப்பாங்க எண்டு நினைச்சனான், இப்ப அடுத்த வளவுக்குள் ஊத்துறாங்க .... நாங்க வரமுன் எங்கட காணிக்குளதான் ஊத்தியிருப்பாங்க, .... என்ன ப(ற)ரந்த மனம் ......" ■

(இலக்கிய மஞ்சரி .....)

கொண்டிருக்கும்போது, விளக்கு அணைந்தால் அது அபசகுனமாகக் கருதப்படும்.

"நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா"

(புறம் 280)

நம்பிக்கை பற்றி 'ஹெலன் ஜான்சன்' என்பவர் பின்வருமாறு கூறுவார்:

'நம்பிக்கைகள் எழக் காரணமாய் இருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம்.. ஆனால், நம்பிக்கை இருப்பது உண்மை. அவை மெய்ப்பிக்கத்தக்கவை.

எல்லாம் முடிந்தது இன்னுமென்ன?
இருப்பதோ உயிர்மட்டும் எதுவுமில்லை
வல்லமை காட்டவோ வாழுமிடங் காணி
வளைத்துப் போடுவீ ருமக்கு!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நம்பிக்கை

இன்று கடவுளை நம்பி வாழ்வது ஒரு சிரமமான காரியம் போலாகிவிட்டது. கடவுள் பக்தியோடு, நம்பிக்கையோடு, உண்மையாக, நேர்மையாக வாழ முற்படுபவர்கண்டு போற்றுகின்றவர்களை விட ஏளனம் செய்பவர்கள் நிறைய! நாலு பக்கமும் நின்று வருகின்ற நெருக்கடிகள் பலவிதமாக இருக்கின்றன. அவை வாழ்வைச் சவால் உள்ளதாக ஆக்குகின்றன. உலகார்ந்த தேவைகளை நாடாதவரைக்கும் தப்பிப் பிழைத்தல் என்பது கேள்விக்குறியாக நம்மவர் பல பேருக்கு இருக்கிறது. நேர்வழி செல்பவரை விட குறுக்கு வழியை நாடுபவர் வாழ்வு இன்று முன்னேற்றகரமாக இருப்பதாக நமக்குத் தோன்றும்போது, நாமும் அவ்வழி போகவே மனது துடிக்கின்றது. இருப்பினும், நமக்குக் கொடுக்கப்பட்ட விசுவாசம், நமக்குக் காட்டப்பட்ட நன்நெறி நம்மைத் தடுத்து இறைவனின் பாதையில் பயணிக்கச் செய்துகொண்டேயிருக்கின்றது. இறை நம்பிக்கை நம்மை வாழச்சொல்லி வலியுறுத்துகின்றது.

பல சமயங்களில் கடவுள் நமது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்றபோது நாம் அவரது ஆற்றலில் வல்லமையில் நம்பிக்கை கொள்கின்றோம் என்பதுதான் சரி. ஆனால், சந்தர்ப்பங்களில் நம் பிரச்சினைகள் தீராமல் போகும்போது கடவுளின் இருப்பையே சந்தேகமாக எடுத்துக்கொள்கின்றோம் இல்லையா? ஆனால், உண்மை என்ன? பிரச்சினைகளை அவர் தீர்த்து வைக்கின்றபோது அவர் வல்லமையில் நம்பிக்கை வைத்திருப்பதைப் போலவே அவரும் சில பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம் என்று நம் ஆற்றலில் நம்பிக்கை வைத்துக் காத்து நிற்கின்றார். நமக்குத்தான் நம்மை நம்பமுடியவில்லை!

தொல்லைகள் வாட்டுகின்றபோது, மலைபோல பிரச்சினைகள் எழுந்தெம்மை அச்சுறுத்துகின்றபோது இத்தோடு சரி, இதுதான் நம்முடிவு என்று கூட நாம் தப்புக் கணக்குப் போட்டுக்கொள்வதுண்டு. ஆனால், கடவுளின் பார்வையில் அது முடிவல்ல, நமக்கொரு வளைவு; நம் பாதையில் ஒரு திருப்பம் என்றுதான் இருக்கிறது. நாம் அநேகமான சந்தர்ப்பங்களில் பிரச்சினை ஒன்று வரும்போதுதான் கடவுளையும் நம்புகின்றோம்; செபத்தையும் நம்புகின்றோம்.

- ஆனந்தா ஏ.ஜி. இராஜேந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாகனமொன்றில் போகின்றபோது கூடவே மேலதிகமாக ஒரு சக்கரத்தையும் கொண்டுபோகின்றோம் இல்லையா? நெடும் பயணத்தில் ஒரு சக்கரத்தில் காற்று தீர்ந்து விட்டதென்றால் அந்த மேலதிக சக்கரத்தை மாட்டிக்கொண்டு பயணத்தைத் தொடருகின்றோம். நம்மவர் பலருக்குச் செபமும் இந்த மேலதிக சக்கரமும் ஒன்றே! பிரச்சினையின்போது தப்பித்துக் கொள்ள அது ஒரு வழி! ஆனால், செபமும் கடவுள் நம்பிக்கையும், சாரதியின் கைச்சக்கரம் மாதிரி நம் வாழ்வை வழிநடத்திச் செல்கின்றவை அவை!



"நாம் அநேகமான சந்தர்ப்பங்களில் பிரச்சினை ஒன்று வரும்போதுதான் கடவுளையும் நம்புகின்றோம்! செபத்தையும் நம்புகின்றோம்!"


பிரச்சினைகளில் மண்டையைப் போட்டு உடைப்பதால் அது எதிர்காலத்தை வடிவமைத்துத் தரப் போவதில்லை. மாறாக இன்றைய நிம்மதியையும், சமாதானத்தையுந்தான் நம்மிலிருந்து எடுத்துவிடுகின்றது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சந்தர்ப்பங்களில் எல்லாமே சௌகரியமாகப் போய்க் கொண்டிருக்கும். ஆனால், அவை நிரந்தரமானவையல்ல. அதுபோலவே எந்தத் தொல்லையாயினும் எப்படியான பிரச்சினையாயினும் சரி எல்லாமே தற்காலிகமானவைதான். அதைப் பெரிதுபடுத்தி நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளால் அதன் பின் விளைவை நாம் எம் வாழ்வில் நிரந்தரமாக்கிக்கொள்ளுகின்றோம்.

நம் நம்பிக்கையில் நாம் தளரக் கூடாது. சிறு வயதான யானைகளைக் கட்டி வைப்பதற்குக் கைதேர்ந்த யானைப் பாகர்கள் நான்கு கால்களையும் மெல்லிய கயிறு கொண்டுதான் தூணோடு கட்டிப் போடுவார்கள். அந்த யானைக் குட்டிகளுக்கு அந்தக் கயிறு போதுமானது. ஆனால், வளர்ந்து பெரியவையான யானைகளையும் அதே கயிற்றுடன் தூணோடு பிணைத்து வைத்திருப்பார்கள். காரணம், அதே சிறு கயிறை அறுத்துக்கொள்ள முடியாது என்ற நம்பிக்கையில் அங்கு நின்று கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு அது நம்பிக்கையாகிவிட்டது.

அவைகளின் நம்பிக்கை அவைகளைக் கட்டுண்டு இருக்கச் செய்கின்றன. அந்தப் பாகன்களின் நம்பிக்கை அவற்றை இலகுவாகக் கையாள வைக்கின்றது. நமது வாழ்வும் நம்பிக்கையில் திளைத்திருந்தாலே உலகில் நிலைத்திருக்க முடியும் என்கிறது எசாயாவுடைய வார்த்தைகள்.

திருப்பாடல்கள், "ஆண்டவரின் மாட்சி, மதிக் காதாரை மிளிரப் பண்ணும்" என்கிறது. நற்செய்தியோ கடவுளை நம்பாது, அவரை ஏற்றுக்கொள்ளாது, அவர் வார்த்தைகளுக்குச் செவிமடுக்காது, தம் வழியில் வாழ முற்படுவோரை சொதோம் கொமரா போன்று அழியப் பண்ணும், தீர் சீதோன் போலவும் பெத்சாயிதா போலவும் சிதைத்துப் போடும் என்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# தீர்க்கதரிசனங்களின் நிலம்!

பயணக் கட்டுரை 09

## இஸ்ரேல் பலஸ்தீன எல்லைச்சுவர்

இந்த எல்லைச் சுவரை வைத்தே, பகைமையின் உக்கிரத்தை எடை போடலாம். ஜேர்மனியின் சுவரைக்கூட மக்கள் அநாயாசமாக உடைத்துக்கொண்டு போனார்கள். ஆனால் இந்தச் சுவர் மட்டில் அதுமட்டும் நடக்காது. அத்தனை உயரமும் பருமனுமாகக் 'கொங்கிரீட்' னால் அமைக்கப்பட்ட அதனைப் பார்க்கவே ஒரு பயம் வரும். ஒரு சிறு கல்லைத்தானும் அந்தச் சுவரைத் தாண்டி எறிய ஒருவனுக்கு அசுர பலம் வேண்டும். சீனச் சுவர்போல் நீண்டு கொண்டே செல்லுமது,








இஸ்ரவேல், பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வென்பதே இனிக் கிடையாது என்பதை அழுத்தமாக உரைக்கிறது.

## நாடோடி அரேபியர்கள்

நகரங்களைத் தாண்டி மிக மிகத் தொலைவில் வீதியோரங்களிலும், மலையடிவாரங்களிலும் இவர்களை நிறையவே காணலாம். தகரத்தினாலும், ஆட்டுத் தோலாலும் தற்காலிக இடங்களை அமைத்துக்கொண்டு வாழும் இவர்களை 'வீம்பர்கள்' என்று பகிடியாய் அழைப்பார்கள். அடிப்படை வசதிகளை நிராகரித்து, சிறு சிறு கூட்டமாய் வாழும் இவர்களைச் சுரண்டுவதற்கென்றே கூட்டமொன்று அலைவதைக் காணலாம். இவர்கள் தங்கள் கால்நடைகளின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல், அநீத தரகர்களிடம் ஏமாந்து போவதே இவர்களின் தலைவிதி.

## ஹூக்கா

இந்த ஹூக்காவை ஏற்கனவே சில ஆங்கில, ஏன் பழைய தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**சா**தாரண மனிதன் என்றும் அடுத்தவனைப் பார்த்து,
அடுத்தவனையிட்டுச் சிந்தித்துப்
பொறாமை கொள்ளுதல் வழக்கம்!
அடுத்தவன் வாழ்வு, வளம், வளர்ச்சிகண்டு
தனக்குள்ளே புழுங்குகிறான்!
தனக்கு அந்த வாழ்வு கிட்டவில்லையே
அதுபோல் வளம் தனக்கு இல்லையே
பிறன்போல் வளர்ச்சி நான் கொள்ளவில்லையே
என்று ஏங்குகிறான்!
பிறன் மனை தொடக்கம், பிள்ளைகள், ஏன் ?
அவர்கள் படிப்பு, பிறன் சொத்து சுகம்
என்று காணுகின்றபோதெல்லாம் தனக்கு(ம்)
அதுபோல் கிட்டவில்லையே என்று சிந்தித்து
மனதில் தோன்றும் காழ்ப்புணர்வால் சமயங்களில்
அடுத்தவனை முடக்க
ஏதாவது பண்ணவும் முனைந்து விடுகின்றான்.
இவ்வாறான ஏக்கமும், காழ்ப்புணர்வும், பொறாமையும்
நியாயமானவையே அல்ல!
ஒருவனது வாழ்வு, வளம், வளர்ச்சி
அவனது நம்பிக்கை, உழைப்பு, முயற்சி
என்பவற்றிலேயே தங்கியிருக்கிறது.
இந்த மூன்றையும் கொண்டிருப்பவனையே
இறைவன் வாழ்வு, வளம், வளர்ச்சி என்பவற்றால்
ஆசீர்வதிக்கின்றான்.
ஒருவரது உயர்வு அவரது கடும் உழைப்பையும்,
உறுதிமிக்க நம்பிக்கையையும், விடாமுயற்சியையும்
அடிப்படையாகக் கொண்டே அமைவதால்
கடவுளின் ஆசீர்வாதம் எல்லோருக்கும் சமமாகக்
கிட்டுவதில்லை என்பதை
நிதானமாக எண்ணிப் பார்க்கையில்
தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.
இறைவன் ஆசீர் என்பது எல்லோருக்கும் கிடைக்கவே
செய்கின்றது என்பதுதான் உண்மை!
ஒருவன் தனக்குக் கிடைத்த இறைஆசீரை விட்டுவிட்டு
அடுத்தவன் பெற்ற ஆசீரைக் கணக்கிடும்போதுதான்
பொறாமை நெஞ்சில் உதயமாகின்றது!

■ ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்

11 ஹுக்காப் போதை....

படங்களிலும் கண்டிருக்கிறோம். 'குலேபகாவலி' திரைப் படத்தில் நடிகர் தங்கவேல் இது போன்ற ஒன்றை வைத்துக் கொண்டுதான் ஊதி ஊதி விளக்கணைத்து, பகடை விளையாட வருபவர்களை அடிமைப்படுத்துவார். முஸ்லிம்கள்தான் இதனைப் பாவிப்பார்கள். எங்கள் மூதூரிலும் முஸ்லிம் பெண்கள் இதனைப் பாவிப்பதனைப் பார்த்திருக்கிறேன். ஒரு போத்தலினுள் மண்ணெண்ணையை நிரப்பி, இரண்டு மூக்கில் குழாய்களை உட்செலுத்தி, ஒன்றில் கார்த்திகை விளக்கீட்டுக்குப் பயன்படுத்தும், சிறிய மண் விளக்குப் போலொன்றில் நெருப்புத் தணலை வைத்து, மறு குழாயினால் உறிஞ்சும் போது, புகை வரும் குழாயை உறிஞ்சும் போது "குடு... குடு ..." என ஒருவகைச் சப்தம் போத்தலின் உள்ளெழும்.

ஆனால், பலஸ்தீன வீதிகளில் புதிய வடிவில் அந்த ஹுக்காவைக் கண்டதும் எனக்கந்தப் பழைய ஹுக்காதான் நினைவில் வந்தது. மணிக்கணக்காகக் குந்தியிருந்து வீதியோரங்களில் புகைத்துக்கொண்டிருப்பார்கள். நான் நின்று அவ்வாறான ஒருவரைப் பார்த்துக்கொண்டு நின்றபோது, என்னிடமும் அந்தக் குழாயை நீட்டினார். அவருக்கு 'வணக்கஞ் சொல்லிவிட்டு அவரை கையோடு புகைப்படமெடுத்தேன். இங்கே மதுக்கடைகள் போல் அங்கே, ஹுக்காக் கடைகள். வேறென்ன... இரண்டும் இருவகை 'போதை' தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






**'தொண்டனின் சில நிமிடங்களுக்காக....' நாம் இம்முறை சந்திப்பது கமலாதேவி இம்மானுவேல் கமலநாதன் அவர்களை. மட்டக்களப்பு புனித.மிக்கேல் கல்லூரியின் முன்னாள் அதிபரான இவர், பிரபல கல்விமானும், எழுத்தாளருமான அமரர் சா.இ. கமலநாதன் அவர்களின் பாரியார் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

திருமதி. கமலாதேவி அவர்கள் 1940.09.26 அன்று, பெரிய கல்லாறு என்ற இடத்தில் பிறந்தார். இவரின் தகப்பனார் பெயர் இஸ்ரவேல் பெரியதம்பி ஜயாக்குட்டி: தாயார் பெயர் - வைரமுத்து வள்ளியம்மா.

இவரிடம் அவரது கல்விபற்றி வினவியபோது ஜே.எஸ்.சி. வரை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், எஸ்.எஸ்.சி வரை திருகோணமலை புனித.மரியாள் பெண்கள் கல்லூரியிலும், பின்னர் எச். எஸ். சி. லண்டன் பரீட்சையை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றதாகவும் குறிப்பிட்டார். 1960ம் ஆண்டு லண்டன் ஏ.எல். சித்தியடைந்தார். 1960களின் நடுப்பகுதியில் பேராதனைப் பல்கலையில் வெளிவாரியாக கலை இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 1975 - 1976ம் ஆண்டுகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் 1988ம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 1990.06.01 தொடக்கம் நிர்வாக சேவை அதிகாரி தரம் பெற்றார்.

இதற்கிடையில் 1960.10.24 அன்று சாமுவேல் இம்மானுவேல் கமலநாதன் அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

மூன்று பெண்களும் மூன்று ஆண்களுமாக ஆறு பிள்ளைகள் (ஒருவர் வளர்ப்பு மகன்) கொண்ட இவருக்கு ஒன்பது பேரப்பிள்ளைகள் உள்ளார்கள்.

இவரிடம் அவரது கல்விப்பணிகள் தொடர்பாகக் கேட்டோம். அதுபற்றி அவர் விளக்குகையில் 16.05.1960 - 30.04.1985 வரை உதவி ஆசிரியராகவும் அதன்பின்னர் 01.05.1985-31.12.1986 வரை உதவி அதிபராகவும், 01.01.1987-31.05.1990 வரை நிறைவேற்று அதிபராகவும் 01.06.1990-15.12.1996 வரை கல்வி நிர்வாக சேவைத் தரம் பெற்ற அதிபராகக் கடமையாற்றியதாகவும் குறிப்பிட்டார். இடையில் 1976 ஜூன், ஜூலை மாதங்களில் மட்/சிசிலியா பெண்கள் ம.வி.இல் உதவி அதிபராகக் கடமையாற்றிய காலம் தவிர அவரது ஏனைய சேவைக்காலம் முழுவதும் மட்டக்களப்பு புனித.மிக்கேல் கல்லூரியிலேயே சேவையாற்றினார்.

**- ஆழியோன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்லூரிச் சாதனைகள் என்று குறிப்பிடும்பொழுது, பல விடயங்களைக் குறிப்பிட்டார்.

இவரது அதிபர் சேவைக் காலத்தில் மாணவர் தொகை ஆயிரத்தால் அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் இரு மடங்காக அதிகரிக்கப் பட்டமை, பாடசாலை தேசிய பாடசாலையாக 1994.04.11 முதல் தரமுயர்த்தப்பட்டமை, 1987ல் புனித மரியாள் பாடசாலையானது புனித மிக்கேல் கல்லூரியுடன் இணைக்கப்பட்டமை, மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவுபெறும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, க.பொ.த (சா.த) 8D பெறுபேறுகள், க.பொ.த (உ.த) 4A பெறுபேறுகள் என்பன பல தடவைகளில் பெறப்பட்டமை, மூன்று தடவைகள் மாவட்ட ரீதியில் 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம் பெற்றமை என்பன குறிப்பிடத்தக்கவை.

இணைப்பாட விதானத்திலும் பல சாதனைகளினை திருமதி. கமலா இமானுவேல் அவர்கள் ஈட்டிக் கொடுத்துள்ளார்கள். அவை பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

7 கூடைப்பந்தாட்ட வீரர்கள் தென்கிழக்காசியப் போட்டிகளில் அகில இலங்கை வர்ணவிருது பெற்றமை, 36 கூடைப் பந்தாட்டச் சாதனைகள் பெற்றமை - அவற்றில் 14 முதலிடங்கள், 12 இரண்டாம் இடங்கள், 10 மூன்றாம் இடங்கள்; உதை பந்தாட்டப் போட்டிகளில் 1992ல் மைலோ கிண்ணப் போட்டிகளில் தேசிய ரீதியில் 2ம் இடம்; 1990 - 1993 வரை மாகாண மட்ட மைலோ வெற்றி வீரர்; அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளில் 34 1ம், 2ம், 3ம் இடங்கள்; 1988ல் டொனல் அடிகளாரின் நினைவு முத்திரை வெளியீடு; 1988, 1991, 1992, 1994ம் ஆண்டுகளில் கல்லூரி மட்ட மாபெரும் பொருட்காட்சிகள்; 1992ல் சர்வதேச EXPO வர்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப விழாவில் கல்லூரி Band அணியினர் பங்கு பற்றியமை; பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், ஒளி விழாக்கள், நடத்தப்பட்டமை; பாடும்மீன் சஞ்சிகையின் மூன்று வெளியீடுகள்; 1993ல் 'விபுலானந்த தீபம்', 1994ல் தேசிய பாடசாலைத் தரமுயர்வு சிறப்பிதழ் வெளியீடு; சாரண மாணவர்கள் தென்கிழக்காசிய சாரண கம்போரியில் பங்கு பற்றியமை;

**கடவுளை நம்புங்கள்**

**கட்டளைக்குப் பணியுங்கள்**

**சாதிக்க முயற்சியுங்கள்**

**சாதிப்பவர்கட்கு உதவுங்கள்**

WUSC நிறுவன ஆதரவில் மரவேலை டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் 1994- 1997வரை நடத்தப்பட்டமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் கல்லூரியில் பௌதீக வள வளர்ச்சிகள் சிறப்பாகக் காணப்பட்டன. குறிப்பாக 16 வகுப்பறைகளுடன் கூடிய கேட்போர் கூடத் தொகுதி என்பன இதில் உள்ளடக்கம்.

"கலை இலக்கியத்துறையில் உங்கள் ஈடுபாடு என்ன? என்று கேட்டபோது, பல தகவல்களைக் கூறினார்.

1960ம் ஆண்டு, 'பாடும் மீன்' சஞ்சிகையில் தான் எழுதிய "பஞ்சத்தை வென்ற சிறுமி" என்ற சிறுகதை முதலாம் பரிசை வென்றது என்றார். 1997-2007 வரை 43 விவிலிய விவரண சிறுகதைகளை வெளியிட்டமை, 1974 கல்லூரியின் 'நூற்றாண்டு மலரின்' இணையாசிரியர், பதிப்பாசிரியராகப் பணியாற்றியமை, 1990, 1991 தாண்டவன்வெளிப் பங்கு மாத சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியராக இருவருடங்கள் பணியாற்றியமை, மன்று வெளியீடான 'பங்கேற்பு மதிப்பீடு' என்னும் மொழிபெயர்ப்பு நூலின் துணையாசிரியர், 2005ல் "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" ஏட்டுச் சுவடிப் பதிப்பு நூலின் இணைப் பதிப்பாசிரியர்; மித்திரன் வாரமலர், தொண்டன், விடிவானம் என்பவற்றில் கட்டுரைகள் எழுதியமை, கல்லூரியில் தமிழ் நாடகங்களைத் தயாரித்தமை என்பன உட்பட பல விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

சமய ஈடுபாடுகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், 1979ல் குடும்பநலம் தொடர்பான தென்கிழக்காசிய மகாநாட்டில் மறைமாவட்டம் சார்பில் பங்குபற்றியமை, 1982-1984 காலப் பகுதியில் மறைக்கோட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொருளாளர், 1982-1986 மறைக்கல்வி ஆணைக்குழு உறுப்பினர், 1985 கார்த்திகையில் பெங்களூரில் NBCLC இல் ஒரு மாத வதிவிட மறையாசிரியர் உருவாக்கற் பயிற்சியில் கலந்து கொண்டமை, தாண்டவன்வெளி புனித வியாகுல மாதா ஆலயப் பாடகர் குழுப் பொறுப்பாளர், பங்கு மேய்ப்புப் பணிச் சபை உறுப்பினர், 1976-1978 கத்தோலிக்கப் பாட சேவைக்கால ஆலோசகர் என்பன தமக்கு திருப்தியானது என்றார்.

வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் என்றால், தனது ஆசிரியர் நியமனம், திருமணம், பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன் கா. சிவத்தம்பி, சு. வேலுப்பிள்ளை மற்றும் பண்டிதர் கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– தொண்டனின் சில .....

என்போருடனான தொடர்புகள் என்பன பற்றிக் குறிப்பிட்டார்.

வாசகர்கட்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டோம்....? பட்டென பதில் சொன்னார்:

- கடவுளை நம்புங்கள்!
- கட்டளைக்குப் பணியுங்கள்!
- சாதிக்க முயற்சியுங்கள்!
- சாதிப்பவர்கட்கு உதவுங்கள்!

இவர் கிழக்குப் பல்கலைக் கழக மூதவை உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடை பெற்றோம். □

**பொ**ங்கியெழும் அலைகளால் ஓயாமல்
மெழுகிவிடப்படுகிற ஈரக் கடற்கரை

கருநாவல் பழமொன்று சிறிய காம்புடன்
அதில் பொத்தென விழுகிறது

அங்கே பறந்துகொண்டிருந்த வண்டுகள்
அதனைப் பார்த்ததும் ... தம் இனத்தைச் சேர்ந்த
ஒரு வண்டுதான் சிறகு கிழிந்து விழுந்து
விட்டதாகக் கருதி ... பதைபதைப்போடு
அதனை நோக்கி விரைகின்றன....

அதே நாவல் பழத்தை ... நாவல் பழமாகவே உணர்ந்த
நண்டு ஒன்று ... தனக்குக் கிடைத்த
இனிப்பான உணவாகக் கருதி .... ஓடிப்போய்
தன் பல்சிறு கால்களால் கௌவியதுதான் தாமதம் .....

'கொடுமைக்காரா! கொடுமைக்காரா! யாரடா நீ?
எம் இனத்து வண்டை வந்து இப்படி
வன்முறை செய்கிறாயே, விடுடா! விடுடா!

காப்பாற்றி மீட்பதற்கான
போராட்ட முயற்சியாய்
அந்த வண்டுகள் குமுறி
நண்டினைத் தாக்கத் துணிகின்றன.

அதே நேரத்தில் அதன் வழியே
இரைதேடும் நாரையொன்று விசுக்கெனப் பறந்துவர .....
பயந்துபோன நண்டு ... பழத்தை விட்டு விட்டு ஓடிப்போய்
வளைக்குள் ஒளிகிறது.

பிறகுதான் அந்த வண்டுகள்
"அப்பாடா..... நம் இனத்து
வண்டிற்கு ஏற்படவிருந்த கொடுமையிலிருந்து
அதனைக் காப்பாற்றிவிட்டோம் ...." என்று அமைதி ஆயின

தம் இனமில்லாத ஒரு நாவல் பழத்தைத் தொட்ட
நண்டினையே தம் இனத்தைத் தாக்க வந்ததாய்ப் பிழையாக
உணர்ந்த வண்டுகள்
இன ஒற்றுமையோடும்
மான உணர்வோடும் தாக்கத் துணிந்தன.....

ஆனால் ...... ஆனால் .......
தம் இனமே
அழிக்கப்படுவதைப் பார்த்தும்
ம் .........

**- அறிவுமதி -**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலி...!

சிறுகதை - 01

இப்படியொரு இக்கட்டு நிகழுமென்று நண்பர் சற்றும் எதிர்பார்த்தாரில்லை. வடக்கே யுத்த மேகங்கள் திரண்டிருந்த காலப்பகுதியில், கிபீர் விமானங்கள் கரும்புகை கக்கியவண்ணம் தாழப்பறந்து தாக்கிய வேளைகளிலும்கூட, ஆறுபேர் கொண்ட இந்தக் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே பங்கர்களுக்குள் தஞ்சம் புகுவதும், மீள்வதுமாக மரண பயத்தில் வாழ்ந்தபோதும் கூட எப்படியோ தப்பியொட்டி, போரோய்ந்த ஒரு சிறு இடைவெளியில் யுத்த சூனியப் பிரதேசங்களினூடாகப் பயணித்து, கிழக்கே கணவரின் சொந்த நிலத்திற்கு வந்து சேர்ந்த ஆச்சரியத்திலிருந்து விடுபடு முன்னரே இந்த அனர்த்தம் நிகழ்ந்துவிட்டதுதான் துர்பலம்.

வரவிருக்கும் நத்தார் பண்டிகையை இம்முறை சிறப்பாகக் கொண்டாடாது விடினும், தன் நண்பிகள் வீட்டிற்கு வருவார்களென்றும், சிறு கூடமைத்து பாலன் பிறப்பை அழகாகக் காட்சிப்படுத்த வேண்டுமென்றும் அம்மாவை நச்சரித்துக்கொண்டிருந்த இளைய மகள், தகப்பனிடமும் ஒரு வேண்டுகோள் விடுத்தாள்.

"அப்பா, இந்த வாழைக்குலை, கிறிஸ்மஸ் வரப் பழுத்துவிடும்தானே... அப்படிப் பழுத்தால் அது எனக்குத்தான் என்ன....?"

எல்லோருக்கும் செல்லமாக வளர்ந்த கடைக்குட்டியல்லவா அவள்! அவள் பேச்சுக்கு மறுபேச்சேது வரும்?

அவளுக்கு ஒரு தலை வலி வந்தால்கூட, குடும்பமே தாங்கமுடியாத வேதனையில் துடிக்கும்ஹ ஆடிப்போகும்.

மூன்று பெண் குட்டிகளும் சீரான ஓர் இடை வெளியில் பிறந்தாலும், நான்காவதாகப் பிறந்த இவள் ஆறு வருட இடைவெளியில் பிறந்த தால் வந்த கரிசனை அது!

புதிய பற்றனில் கவுணும் தைத்துக் காத்திருந்தவளுக்கு, பண்டிகைக்குச் சரியாக ஒரு வாரம் இருக்கையில் இலேசான ஒரு காய்ச்சல் வந்தாலும் வந்தது.

பனடோல் கொடுத்தும் சரி வராத காரணத்தால், மூன்றாம் நாள் அருகிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் மருந்தெடுத்து ஊசியும் போட்டுக்கொண்டு வந்தபின் உஷாராகத்தான் இருந்தாள்.

அவள் மட்டுமன்றி, குடும்பமே திருப்தியாயிருந்த இரண்டு நாட்களின் பின் திடீரென வலியால் துடித்தவள், சில நிமிடங்கள் மூச்செடுக்க அவதிப்பட்டாள்.



- வீக்கேயெம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பதறித் துடித்தவர்கள், அவளை மறுபடியும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஆயத்தமாகும்போது மறுபடியும் வலியால் துடித்தவள், நிரந்தரமாகக் கண்மூடுவாளென்று யாருக்குத் தெரியும்?

ஆடிப்போனது அந்தக் குடும்பந்தானெனினும், அறிந்த — தெரிந்த நண்பர்கள் உறவினர்களென்று ஊரே அவலப்பட்டது.

அவளோடு பயின்று, அவள் வீட்டிற்குப் போய் பண்டிகையைக் கொண்டாடுவோமெனக் காத்திருந்த நண்பிகள் கத்திக் கதறிய சோகம் மனதைப் பிழிந்தது.

இயற்கை மரணம்தான்; என்றாலும் தாங்கமுடியாத பேரிழப்பு அது! பண்டிகைக்கெனத் தைத்த ஆடையுடன் அந்தப் பிஞ்சு, மண்ணில் புதையுண்ட கோலம் யாரைத்தான் வாட்டி வதைக்காது...?



நமதில்லை மகனே
இந்த வீடும் கதவுகளும்
மாடங்களும் படிக்கல்லும்
வெளிப்புற வேலிப்படர்ப்பும்
பொன் பூக்களும்

நமதில்லை மகனே,
இந்த வீடும் வாசலும்
நந்தியாவட்டை நிழலும்
அரளியும் இலஞ்சிப்பூ மணமும்

நமதில்லை மகனே,
இந்த வீடும் குளமும்
கோயிலும் குளிர் சாமரம் வீசும் காற்றும்,

நமதில்லை மகனே,
இந்த வீடும் சித்திர விதானங்களும்
கண்ணாடி பார்க்கும் மரச்சிற்பக் கன்னிகளும்

நமதில்லை மகனே,
இந்த வீட்டின் கோடியில்
தொங்கவிட்டிருக்கும்
ஆலோலம் கிளிக்கூடும்
நெல்மணிக் குதிர்களும்

நமதில்லை மகனே,
இந்த வீடும் வீட்டின் சங்கீதமும்
நாம் போகிறோம்,
காலதேசங்கள் அறியாமல்
பூமியின் எல்லைக்கோடுவரை
முடிவில்லா யாத்திரையாய் ....
யாத்திரையின் இடையில்
ஒரு நொடி தலைசாய்க்க
வீடு தேடிப் போகிறோம் மகனே நாம்!

■ சிறியத்தன் (மலையாளம்)
■ தே.க. மலஜா (தமிழில்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மருத்துவமும் மருந்துகளும்

நவீன உலகில் மருத்துவத்துறை அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. புதுப்புது மருந்துகள், நவீன இலத்திரனியல் பரிசோதனை முறைகள், உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைகள், உடலை அறுக்காமலே துளைபோட்டுச் செய்யும் (லெப்பிரஸ்கோப்பி) அறுவை சிகிச்சைகள் என நாளும் பொழுதும் மருத்துவத்துறை புதுக்கோலம் பூணுகிறது. அதேவேளை, இன்றைய உலகில் இலாபமீட்டும் மிகப்பெரும் வணிகமாகவும் மருத்துவத்துறை வளர்ந்து வருகிறது. சந்தைப் பொருளாதாரக் கோட்பாடுகள் மருத்துவத்தையும் விட்டுவைக்கவில்லை.

இன்று நவீன சிகிச்சை முறைகள் வளர்ந்திருந்தாலும், அவை அரச மருத்துவ மனைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்களுக்குக் கிடைக்கின்றன. முழுமையான, முக்கியமான சிகிச்சைகளுக்காக மக்கள் தனியார் மருத்துவமனைகளையே நாடவேண்டி இருக்கிறது. அப்படிச் செல்லவே மருத்துவர்களாலும் தூண்டப்படுகிறார்கள். அங்குப் பல இலட்சங்களை இறைத்தே சிகிச்சை பெறவேண்டி நேருகிறது. இங்கே செல்வந்தர்களுக்குப் பிரச்சினை இல்லை: ஒரு பக்கத்தால் ஊறுவதை, இன்னொரு பக்கத்தால் இறைத்து விடுவார்கள். ஆனால், நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்கள்தான் தீராத நோய்க்கும், மரணத்துக்கும் ஆளாகும் பரிதாபத்தைக் காணலாம்.

முற்காலத்தில் மருத்துவம் என்பது மனித குலத்துக்கு ஆற்றும் பெரும் பணியாக, தொண்டாக, சேவையாகக் கருதப்பட்டது. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மருத்துவக் கல்வியும் பணியும் செலவுமிக்கதாகவும் சமூக அந்தஸ்தில் உயர்ந்த ஒரு தொழிலாகவும் மாறிப்போனது. அதனால், சிகிச்சைக்கான செலவும் மலையேறி விட்டது.


முன்பெல்லாம் வைத்தியர்கள் நோயாளிகளை வீட்டுக்கு வந்து பார்ப்பார்கள். நோய்க் குறிகளுக்கும் நோயாளியின் நிலைக்கும் ஏற்ற மருந்துகளைத் தயாரித்துக் கொடுப்பார்கள். நவீன மருத்துவத்தில் வைத்தியருக்கும் மருந்துகளுக்கும் சம்பந்தமே இல்லை. மருந்துகளை சர்வதேச மருந்துக் கம்பனி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களே தயாரிக்கின்றன. அவைகளை மக்கள் மத்தியில் சந்தைப்படுத்தும் கௌரவமுள்ள தரகர்களாக மருத்துவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். இன்னின்ன நோய்க்கு இந்த இந்த மருந்துகள் என்று மருந்துக் கம்பனிகள் கொடுக்கும் மருந்துகளை வைத்தியர்கள் நோயாளரின் தேவைக்கேற்ப அளவறிந்து கொடுப்பதே அவர் வேலை. இதற்காகவே, கம்பனிகள் கொடுக்கும் அன்பளிப்புகளும், அனுசரணைகளும் ஏராளம். ஆனால், எல்லாச் செலவுகளையும், இலாபங்களையும், கூலிகளையும் கட்டிச் சுமப்பவர்கள் அப்பாவி மக்களல்லவா...?








வணிகமயப்பட்ட மருத்துவமும் மருந்துகளுமே இன்று பக்க விளைவுகளைக் கொடுத்து மக்களை நிரந்தர நோயாளியாக்கிவிடுகின்றன! மருந்து வியாபாரிகளுக்கு நோயாளிகள் தானே தேவை!

மருத்துவத்துறையின் அபிவிருந்தி என்பது வானுயர்ந்த கட்டிடங்களும், அதிநவீன கருவிகளும், புதிய புதிய மருந்துகளும் என்று நம்பி, பிரமிக்கும் அளவுக்கு சுரண்டல் கலாசாரம் நம்மை மூளைச் சலவை செய்து வைத்துள்ளது. உண்மையில் மருத்துவத்துறையின் தலை சிறந்த பணியும் அபிவிருத்தியும் நோயில்லாத ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதாகவே இருக்கவேண்டும். இதனை அன்றுணர்ந்த நமது முன்னோர்கள் உணவையே மருந்தாக்கினர். நமது சமையல் முறைகளில் பாவிக்கப்படும் இஞ்சி, மிளகு, சீரகம், கறுவா, ஏலம், வெங்காயம், பெருங்காயம், சிறு தானியங்கள், தவிட்டரிசி, தயிர், மோர் என்று சேர்க்கப்படுபவை எல்லாம் நோயறுக்கும் மருந்துகளே! இவை போன்ற இயற்கையான உணவு முறைகளை, தானியங்களை நாளாந்த வாழ்வில் பழக்கப்படுத்திக்கொண்டால், பாஸ்ட் பூட், பீட்சா, பிரைரையிஸ், பரோட்டா, கொத்துரொட்டி போன்றவைகளை ஓரங்கட்டினால் எண்ணெயில் பொரித்து எடுப்பதைத் தவிர்த்து, ஆவியில் அவித்த உணவுகளை உண்டு வந்தால், மருந்து வியாபாரிகளின் பிடிகளுக்குள் சிக்காது நமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கலாம்.

அதையும் மீறி நோய்கள் தலை காட்டினால் இருக்கிறது மருந்தில்லா மருத்துவங்கள் யோகா, அக்கியுபஞ்சர், அக்கியுபிறசர், பிராண சிகிச்சை போன்றவை.

ஒழுங்கான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்பவர்களுக்கு உணவுகளும், குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுமே போதுமானவை! இதனை மீறினால் பக்க விளைவுகளற்ற, செலவு குறைந்த ஹோமியோபதி போன்ற மருத்துவ முறைகளைக் கையாளலாம். ஆனால், இதையெல்லாம் விடுத்து மருந்துக் கம்பனிகளிடம் மாட்டிக்கொண்டு அலைபவர்களை நாமென்ன செய்யமுடியும்...?

**- ஆனந்தசித்தன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




நீத்தாரை நினைந்து அறம்புரிவீர்
நீள்புவியைக் காத்தாரைக் கைதொழுவீர்
மூத்தோரை முன்னவரை முழுஞானம் அளித்தவரை
வாழ்த்துவதே வாழும்வழி யறி!

எம் பெருமான் இயேசு கூறிய உண்மை நிறைந்த வார்த்தைகள் இவை. வாக்கு மாறா இறைவன் தம்மை நம்புவோரை நிச்சயம் கைவிடமாட்டார். ஏதோ ஒரு வகையில், ஒரு வழியில், ஓர் உருவில் அல்லது எமக்குள் இருந்து எழும் குரலாக எப்படியாயினும் வருவார். நம்மைக் காப்பார் என்பது திண்ணம். இத்தகைய நம்பிக்கையை ஊட்டும் ஒரு சம்பவம் மேல் நாட்டில் நிகழ்ந்துள்ளது.

ஒரு வயது முதிர்ந்த தம்பதிகள் தமது மோட்டார் வாகனத்தில் ஆலயத்திற்கு வந்தனர். வரும்போதே வாகனத்தில் சிறு கோளாறு. எனவே, அவர் மனைவியை ஆலயத்திற்குள் செல்லும்படியும், தான் பிறகு வருவதாகவும் கூறி அனுப்பிவிட்டு, வாகனத்தைப் பூட்டிக் கொண்டு உள்ளிருந்து அதைத் திருத்தத் தொடங்கினார். திடீரென வாகனக் கதவுகள் இறுகித் திறக்க முடியாமற் போய்விடவே, செய்வதறியாது தவித்த அவர், உள்ளிருந்து ஒரு மணம் பரவி மூச்சு முட்டச் செய்வதையும் உணர்ந்தார். தன் பலமெல்லாம் கூட்டி யன்னல் கண்ணாடி, கதவுகளை அடித்துச் சத்தமெழுப்பினார். ஆலயத்தில் வழிபாடு ஆரம்பித்துவிட்டமையால், எவரும் வெளியே காணப்படவில்லை. இறைவனை நினைத்துக் கொண்டார். மீண்டும் உதவிகேட்டுச் சத்தமிட்டார். தன் ஆயுள் முடிந்துவிடப்போகிறதோ என்று சந்தேகப்பட்டாலும் கடவுளை நினைத்து உதவி தேடினார். அப்போது ஒரு மூன்று வயதுள்ள சிறுவன் பந்து விளையாடிக்கொண்டு வந்தான். வாகனத்திற்கருகில் நின்றாலும், நடப்பது என்னவென்பதைப் புரிந்துகொள்ள முடியாத வயது. ஏதோ சத்தம் என்பதைப் புரிந்துகொண்டு எட்டிப்பார்த்து விட்டு ஓடிவிட்டான். உள்ளேயிருந்து இதைக் கண்டவர், நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்தும் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தார். ஆனால், சென்ற சிறுவன் ஒரு மனிதரைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு சென்ற வேகத்திலேயே திரும்பிவந்தான். அழைத்து வந்தவரை வாகனத்திற்குக் கூட்டிவந்து காட்டினான். அவர் நேரத்தை வீணடிக்காது, நிலைமையைப் புரிந்துகொண்டு தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு சில நிமிடங்களில் கதவைத் திறந்து உயிரைப் பிழைக்க வைத்தார். எப்படிப் பார்த்தீர்களா....? கஷ்டங்களுக்கு மத்தியிலும் மனம் சோராது நாம் நாடவேண்டியது இறைவன் ஒருவரையே. அவர் எம்மை வாழ்விப்பார் என நம்புவோம்.

**"நம்பியோர் கைவிடப்படார்"**

– மற்றில்டா இராஜேந்திரம் –






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகளும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும்




தொடர் – 04

## மீண்டும் ஒலிம்பிக்ஸ்

1963க்கும் 1937க்கும் இடைப்பட்டகாலத்தில் வாழ்ந்த பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த ஒருவராகிய பெரன் பீர்டி குபேர்டின் (Frenchman, Baron Pierre de Coubertin) என்பவர் (வயது 39) மீண்டும் ஒலிம்பிக் போட்டி நடைபெற ஆலோசனை வழங்கினார். அவரது மதிப்பீட்டின் படி பண்டைய கிரேக்க நாகரிகத்தின் உச்சம் அங்கு நடை பெற்ற விழாவாகும். 1894ல் பரிஸ் நகரில் நடைபெற்ற ஒரு விளை யாட்டுக் கூட்டத்தில் இக் கருத்தை பெரன் முன்வைத்தார்கள். 1894ம் ஆண்டில் 9 நாடுகளைச் சார்ந்தவர்களின் கூட்டத்தில் விவாதத்திற்கு இது எடுக்கப்பட்டு இவ் விளையாட்டு ஆரம்பிக் கப்பட்டது.

மீளவும் கிரேக்க ஒலிம்பிக் விளையாட்டுகள் அதனை உருவாக்கிய கிரேக்க நாட்டின் எதென்ஸில் 1896ல் நடைபெற்றது. பின்னர் 4 ஆண்டுகளுக்கொருமுறை நடைபெற்றது.

France, U.S.A, London, Sweeden Belgium, Paris, Natherland Berlin, Germany, Finland, Australia, Italy, Japan, Mexico ஆகிய நாடுகளில் இடம் பெற்றன. இறுதியாகக் கூறிய Mexico வில் 1968ல் நடைபெற்றது.

ஒரு சர்வதேசக் குழுவே அதை வழிநடத்துகிறது. தற்போது 14 நாட்களுக்கு இப்போட்டி நடைபெறுகிறது. நன்கு பயிற்சி பெற்ற விளையாட்டுக் கலைஞர்களே பங்குபற்றுகின்றனர். இது ஒரு விதியாகும். ஒலிம்பியாவிலிருந்து கிரேக்கத்திற்கு ஓடி வரும் ஓட்டக்காரர்கள் ஒலிம்பிக் போட்டியில் நேர்மையாகவும் விளையாட்டின் குறிக்கோளுக்கிணங்க விளையாடுவோமெனவும் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.


ஒலிம்பிக் விளையாட்டுகளில் இடம்பெறும் விளையாட் டுகளைக் குறிப்பிடுதல் அவசியம். ஓட்டப்பந்தயம், அம்பு எறிதல், கூடைப்பந்து, வலைப்பந்து, குத்துச்சண்டை, தோணி ஓட்டம், சைக்கிள் ஓட்டம், வேலிகட்டல், உதைபந்தாட்ட குழுக்கள், ஜிம்னாஸ்ரிக்ஸ், பந்தைக் கையால் எறிதல், ஹொக்கி, நவீன ஈட்டி எறிதல், சைக்கிள் ஓட்டம், நீச்சல், சுழியோடல், சுடுதல், கரப்பந்தாட்டம், தண்ணீர் போலோ, பாரம் தூக்குதல், ஜூடோ, மல்யுத்தம், படகு ஓட்டம் Yachting, பெண்களுக்கான பல விளை யாட்டுகளும் உள்ளன. குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகள் 1924ல் ஆரம்பிக்கப்பட்டன. பனியில் சறுக்குதல் போன்ற சில விளை யாட்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, மேற்கூறிய ஒலிம்பிக் விளையாட்டுத்தத்துவங்கள் பயிற்சி என்பவற்றையும் சத்தியப் பிரமாணத்தையும் அது வாழ்வின் ஒரு படி என்பதனையும் மாணவர்களுக்கு வலியுறுத்துதல் வேண்டும்.

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# உறுப்பு மாற்று சிகிச்சையில் மறைக்கப்பட்ட உண்மை!



உறுப்பு மாற்று சிகிச்சை என்பது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; பத்திரிகைகள், நூல்களில் படித்தும் இருப்பீர் கள். இதய மாற்று சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை என்றெல்லாம் அடிக்கடி பத்திரிகைகளில் வரும். உடலின் உறுப்புகள் பழுதடைந்து சீராக்கவே முடியாத நிலை ஏற்பட்டால் அதற்குப் பதிலாக மாற்றுறுப்பை, பிற மனிதர்களின் பொருத்தமான உறுப்புகளை சிகிச்சையின் மூலம் பொருத்தி இயங்கவைப்பதுதான் உறுப்பு மாற்று சிகிச்சை.

முதன் முதலாக இந்த உறுப்பு மாற்று சிகிச்சை 1954ம் ஆண்டு டிசம்பர் 29ம் திகதி பொஸ்டன் நகரில் ஒரு வைத்தியசாலையில் செய்யப்பட்டது. ரிச்சார்ட் ஹெரி என்பவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு இறக்குந் தருவாயில் இருந்தபோது அவருக்கு இன்னொருவரின் சிறுநீரகம் பொருத்தப்பட்டு உயிர் பிழைத்தார். அதன்பின் இந்தச் சிகிச்சை சாதாரணமாகிவிட்டது. இந்த வரிசையில் முதன் முதலாக மனித இதயத்தை பெயர்த்துப் பொருத்திச் சாதனை புரிந்தவர் ஆபிரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டியன் பேர்னார்ட் எனும் வெள்ளை இன மருத்துவராவார். இது உலகெங்கும் அறிந்த செய்தி; ஆனால், அதிக அளவில் அறியாத செய்தியும் இதற்குப் பின்னால் உண்டு. இன மேலாதிக்க சக்திகள் இரும்புக் கரம் கொண்டு அதனை மறைத்தன.

கிறிஸ்ரியன் பேர்னார்டின், இருதய மாற்று அறுவை சிகிச்சைக்குத் துணை நின்றவர், அதனை ஒருவரிடமிருந்து மிகவும் கவனமாக அறுத்து எடுத்துக் கொடுத்தவர் 'ஹமில்டன் நாக்கி' எனும் கறுப்பு இனத்தவர். தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் வெள்ளையர்களின் சிகிச்சை அறைக்குள் கறுப்பர்கள் நுழையவோ, வெள்ளையர்களைத் தொடவோ, அவர்களது சதைகளை அறுக்கவோ, இரத்தத்தைத் தொடவோ அனுமதி மறுக்கப்பட்ட காலமது. ஆனால், ஹமில்டனுக்காக இரகசியமாகச் சட்டத்தை மீறிச் செயற்பட மருத்துவமனை அனுமதித்தது ஹமில்டனின் திறமையினால்தான். எனினும் புகழ்பெற்ற முதலாவது அந்த மாற்று சிகிச்சையின் பெயரும்

26ம் பக்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




"நாளைய இயக்குனர்" இலிருந்து இன்றைய இயக்குனராகக் களமிறங்கியிருக்கும் ரமேசின் படந்தான் இந்தத் "தெகிடி".

இது 'அட்டகத்தி', 'பீட்சா', 'சூது கவ்வும்' உள்ளிட்ட வெற்றிப் படங்களையும், வித்தியாசமான படங்களையும் தயாரித்த திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் பட நிறுவனத்தின் மற்றுமொரு வித்தியாசமான படைப்பாகும்.

கதைப்படி, கதையின் நாயகர் 'வெற்றி' எனும் அசோக் செல்வன் கிரிமினாலஜி படித்துவிட்டு உயிருக்கும், உடைமைக்கும், திறமைக்கும் சவால் விடும் படியான துப்பறியும் வேலை பார்க்கத் துடிப்புடன் சொந்த ஊரான தஞ்சாவூரில் காத்திருக்கிறார். அவர் எதிர்பார்த்தபடியே சென்னையில் உள்ள ஒரு தனியார் டிடக்டீவ் ஏஜென்சியில் இருந்து அவருக்கு அழைப்பு வருகிறது. அப்பாவிடம் சொல்லிவிட்டு சென்னைக்குச் செல்கிறார் வெற்றி.

சென்னை சென்றடைந்ததும், தன்னைப் படிக்கும்போதே புத்திசாலியாக ஒப்புக்கொண்ட பேராசிரியரின் ஆசியைப் பெற்றுக்கொண்டு அந்தத் தனியார் துப்பறியும் நிறுவனத்தில் வேலைக்குச் சேருகிறார். வேலைக்குச் சேர்ந்த உடனேயே சிலரது புகைப்படங்களும், அவர்களது முகவரியும் வெற்றியிடம் தரப்படுகிறது. அவர்களைப் பற்றிய அனைத்து விடயங்களையும் அக்குவேர் ஆணிவேராக விசாரித்துத் துப்பறிந்து அந்த நிறுவனத்தில் நல்லபெயர் எடுக்கிறார் வெற்றி. ஒரு சில அசைமென்ட்டுகளுக்கு அப்புறம் மது எனும் ஜனனி ஐயரின் புகைப்படத்தையும் அவரிடம் வழங்கும் அந் நிறுவனம், அவர் பற்றிய தகவல்களையும் துப்பறியச் சொல்கின்றது.

ஏற்கனவே ஒருமுறை வெற்றி, தன் துப்பறியும் பணிக்காக கமலக்கண்ணன் என்பவரது வீட்டை கள்ளத்தனமாகத் திறக்க முற்படும்போது வெற்றியைப் பார்த்துவிட்டு அவரைத் திருடனாக கருதுகிறார் ஜனனி ஐயர். தன்னைப் பின்தொடரும் வெற்றி எனும் அசோக் செல்வனைப் பார்த்துவிட்டு சப்தம் போடுகிறார். வெற்றி அவரது வீட்டிற்கே போய் ஜனனியை சமாதானம் செய்கிறார். இருவருக்குள்ளும் காதல் மலருகிறது. ஒரு பக்கம் ஜனனி ஐயரைப் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டே மற்றொரு பக்கம் அவருடன் லவ் டூயட் என்று காதலிலும் உலா வருகிறார் வெற்றி .

இந்நிலையில் வெற்றி தன் துப்பறியும் நிறுவனத்திற்காக தகவல் திரட்டித் தந்தவர்கள் வரிசையாக விபத்தில் மரணமடையும் செய்திகளைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார். அதுபற்றி துப்பறியக் கிளம்பும் வெற்றி, கண் முன்னே இன்னும் சில கொலைகளை விபத்தாகப் பார்க்கிறார். எல்லாமே தான் துப்பறிந்து தந்த மனிதர்கள் என்பதால் மேலும் திகிலடைகிறார் வெற்றி எனும் அசோக் செல்வன்!

தான் வேலை பார்த்த டிடெக்டீவ் ஏஜென்சி மீது சந்தேகம் கொண்டு அவர்களைத் தேடி ஆக்ரோஷத்துடன் புறப்படுகிறார். அவர்கள் நிறுவனத்தை இழுத்து மூடிவிட்டு 'எஸ்' ஆகி விடுகின்றனர். தன்னையும், தன்னால் துப்பறியப்பட்ட தன் காதலியையும் காத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படும் ஹீரோ, இச் சமயத்தில் கமலக்கண்ணன் இறப்பதற்கு முன் அவருடன் இறுதியாக செல்போனில் பேசிய காரணத்திற்காக அறை நண்பருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கைது செய்யப்படுகிறார். காதலி ஜனனிக்கு மொத்த உண்மையும் தெரியவருகிறது. முதலில் கோபம் கொள்ளும் அம்மணி, ஒருவழியாக சமாதானமாகி வெற்றியின் பேராசிரியர் உதவியுடன் வெற்றியையும், அவரது நண்பனையும் ஜாமினில் எடுக்கின்றார்.

ஜெயிலில் இருந்து வெளியில் வரும் வெற்றி தனது இந்த நிலைக்குக் காரணமானவர்களை, தன்னைக் கைதுசெய்த போலீஸ் ஜெ.பி. உதவியுடனும், அவரது உதவி இல்லாமலும் சட்டத்தின் முன் நிறுத்தவும், விபத்து என ஜோடிக்கப்பட்டு இத்தனை கொலைகளுக்கான நோக்கத்தையும் தெரிந்துகொள்ள முற்படுகிறார். அவர்களது நோக்கம் படம் பார்க்கும் நமக்கும் பகீர் என்றிருப்பது "தெகிடி" படத்திற்கு கிடைத்திருக்கும் வெற்றி!

ஒருவழியாக ஹீரோ, மோசமானவர்களில் முக்கியமானவர்களான அத்தனை பேரையும் திட்டமிட்டபடி சட்டத்தின் முன் நிறுத்தினரா? தண்டனை தந்தாரா...? என்பது வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும், எதிர்பார்க்காத திருப்பங்களுடன் படமாக்கப்பட்டிருப்பது கிளைமாக்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது சூப்பரோ சூப்பர்!

ஹீரோவாக அசோக் செல்வன், தமிழ்வாணன் நாவல்களில் படித்த துப்பறியும் சங்கர்லாலை நம் கண்முன் காட்சிக்கு நிறுத்துகிறார். ரொமான்ஸ் காட்சிகளிலும், இவர் அறிமுகமான "வில்லா" படத்தை விட நல்லா நடித்திருக்கிறார். "கீப் இட் அப்".




மதுவாக ஜனனி ஐயர், சபாஷ் ஐயர் எனும்படி கண்களாலேயே அத்தனை பாவங்களையும் வெளிப்படுத்தி ரசிகனை சீட்டோடு கட்டிப் போடுகிறார். போலீஸ் ஆபிஸர் ஜெயப்பிரகாஷ், சைலேஷ், ஜெயக்குமார், நண்பர் நம்பியாக வரும் கலை, சாய், கமலக்கண்ணன், பேராசிரியர் சடகோபன், மாதவன், சக்கரபாணி உள்ளிட்ட எல்லோரும் பாத்திரத்திற்கும், படத்திற்கும் பலம் சேர்த்து பலே சொல்ல வைத்திருக்கின்றனர்.

தினேஷ் கிருஷ்ணனின் இருட்டிலும் மிளிரும் ஒளிப்பதிவு, நிவாஸ் கே.பிரசன்னாவின் மிரட்டும் இசை, லியோ ஜான்பாலின் படத்தொகுப்பு, புதியவர் பி.ரமேஷின் இயக்கம் உள்ளிட்ட கூட்டணிக்கு ஒரு சல்யூட் போடத்தான் வேண்டும்.

'அட்டகத்தி', 'பீட்சா', 'சூதுகவ்வும்' வரிசையில் "தெகிடி" யும் தயாரிப்பாளர்களுக்கு வெற்றிப் படமாகியுள்ளதென்றால் மிகையல்ல!!

ஆக மொத்தத்தில், "தெகிடி" மிரட்டலடி! மிரட்டுதடி!!


எஸ். ரமணன்

**உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் ....**

புகழும் கிறிஸ்டியன் பேர்னாட் எனும் வெள்ளை இன மருத்து வருக்கே போய்ச் சேர்ந்தது. ஹமில்டன் மறைக்கப்பட்டார். ஆனால், மருத்துவரான கிறிஸ்ரியன் பேர்னாட் தாம் இறப்பதற்கு முன் ஹமில்டன் தன்னை விடச் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர் என்று மனந்திறந்து புகழ்ந்தார்.


கிறிஸ்ரியன் பேர்னார்ட்

ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தபிறகு மருத்துவர் கிறிஸ்டியன் பேர்னாட் மூலமே உலகம் ஹமில்டனை அறிந்து கொண்டு அவருக்குப் பாராட்டுகளையும் பட்டங்களையும் வழங்கியது. ஏறத்தாள மூவாயிரம் அறுவை சிகிச்சை மருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை வளர்த்துவிட்ட ஹமில்டன் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடச் செல்லாதவர் என்பது வியப்பைத் தருகிறது அல்லவா...?


ஹமில்டன் நாக்கி

- இன்பம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.11.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 137

**யோசுவா : 18:1-28**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பு முழுவதும் சீலோவில் ஒன்றுகூடியது. அங்குச் சந்திப்புக் கூடாரத்தை அமைத்தனர். ஏற்கெனவே, அவர்கள் நிலத்தைக் கைப்பற்றியிருந்தனர். ஏழு குலங்களுக்கு அவர்களது உரிமைச் சொத்து பிரித்துத் தரப்படவில்லை. இஸ்ரயேல் மக்களிடம் ...................... "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டைப் பெற்றுக்கொள்ளாமல் எவ்வளவு காலம் சோம்பேறிகளாக இருப்பீர்கள்? குலத்திற்கு மும்மூன்று பேரைத் தேர்ந்தெடுங்கள். அவர்களை நான் அனுப்ப, அவர்கள் புறப்பட்டு, ...................... சுற்றிச் சென்று, அவரவர் உரிமைச் சொத்து இன்னதென்று வரைந்து, என்னிடம் கொண்டுவருவார்கள். நாட்டை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பர். யூதா தெற்கில் தங்கள் எல்லையில் தொடர்ந்து தங்கியிருப்பர். யோசேப்பின் வீட்டார் வடக்கில் அதன் எல்லையில் தொடர்ந்து தங்கியிருப்பர். நீங்கள் நிலத்தை ...................... பிரிவுகளாக வரைந்துகொண்டு வருவீர்கள். நான் கடவுளின் முன்னிலையில் திருவுளச் சீட்டுப் போடுவேன். லேவியர்க்குப் பங்கில்லை. ஏனெனில், குருத்துவப் பணி புரிவதே அவர்களின் உரிமைச் சொத்து" என்றார். மோசே அவர்களுக்குக் கொடுத்தபடி, காத்து, ரூபன், மனாசேயின் அரைக்குலம் ஆகியோர் தமது உரிமைச் சொத்தை ...................... அப்பால் கிழக்கில் பெற்றனர். அவர்களும் புறப்பட்டனர். அவர்களிடம் யோசுவா, "சென்று நிலத்தைச் சுற்றிப் பார்த்து வரைந்துகொண்டு வாருங்கள். நான் சீலோவில் திருவுளச் சீட்டுப் போடுவேன்" என்றார். அவ்வாறே அவர்கள் முடித்துக்கொண்டு வரவே, யோசுவா ...................... போட்டார். நிலத்தைப் பங்கிட்டார். முதற்சீட்டு பென்யமின் குலத்தாருக்கு விழுந்தது. அவர்களது எல்லை யூதா, யோசேப் ஆகியோரின் மக்களுக்குமிடையில் விழுந்தது. அவர்களது எல்லை யோர்தானில் இருந்து ...................... வட சரிவில் ஏறி, பிறகு மேற்கில் மலைப்பக்கம் சென்று பெத்சாவேன் பாலை நிலத்தில் முடிவடைகிறது. மீண்டும் அங்கிருந்து பெத்தேல் எனும் லூசின் சரிவுக்குச் சென்று கடக்கிறது. பின் பெத்கோரோனுக்குத் தெற்கே மலைமீதுள்ள ...................... நோக்கிச் செல்கிறது. பின் மேற்கே திரும்பி மலைக்குத் தெற்காக பெத்கோரோனுக்க எதிராக யூத மக்களின் கிரியத்து பாகாலில் முடிகிறது. இதுவே மேற்கெல்லை. அதன் தென் எல்லை அவ்வூரின் எல்லையிலிருந்து மேற்கே சென்று, நெப்தோவாகு நீர் நிலைகள் வரை போய் ...................... பள்ளத்தாக்கின் வடக்கிலுள்ள இன்னோம் மகனின் பள்ளத்தாக்கை நோக்கி நிற்கும் மலைவரை செல்கிறது. பின் எபூசியரின் மலைச் சரிவுக்குத் தெற்கேயுள்ள இன்னோம் பள்ளத்தாக்கை நோக்கி ஏன்ரோகேல் பக்கமாக இறங்குகிறது. அங்கிருந்து வடக்கே திரும்பி ...................... மேட்டுக்கு எதிரில் கெலிலோத்துப் பக்கம் திரும்பி ரூபனின் மகன் போகனின் கல் பக்கம் செல்கிறது. வடக்கே அராபாவில் இறங்கி பெத்தொகிலாவின் வடசரிவைக் கடந்து யோர்தானின் தென்பகுதியில் முடிகிறது. இதுவே தென் எல்லை. கிழக்கே யோர்தான் நதி எல்லையாகும். ...................... குலத்திற்கு இருபத்தாறு நகர்களும் அவற்றின் சிற்றூர்களும் பென்யமின் மக்களுக்கு அவர்களின் குடும்பங்களின்படி கிடைத்த உடைமைகள் ஆகும்.

| | |
|---|---|
| **விடைகள்:** | **ஏழு, திருவுளச் சீட்டு, அந்தராத்து அதாரை, இரபாயிம், யோசுவா, யோர்தானுக்கு, பென்யமின், அதும்மிம், எரிகோவில், நாடெங்கும்** |

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 137

**பரிசுப் போட்டி**




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. உலகின் முதலாவது பெண் பிரதமர்
(இந்திரா காந்தி - மாக்கிரட் தட்சர் - சிறிமாவோ பண்டாரநாயக்கா)

2. சினிமா தியேட்டர்களே இல்லாத நாடு
(லிபியா - சவூதி அரேபியா - வெனிசுவேலா)

3. காலை நேரத்தில் பாடப்படும் இராகம்
(பூபாளம் - மோகனம் - காம்போதி)

4. ஒளியின் வேகம் விநாடிக்கு கிலோ மீற்றரில்
(250,000 - 280,000 - 300,000)

5. 'நோயற்ற வாழ்வே ..............................'
(நிறைவான செல்வம் - குறைவற்ற செல்வம் - நிலையான செல்வம்)

6. 'ஊர் சிரித்தது' இவ்வாக்கியத்தில் வரும் ஊர் என்பது,
(இடவாகு பெயர் - பண்பாகு பெயர் - உவமையாகு பெயர்)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

தொ.பே.இல. ..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் – 137**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 135 விடைகள்

அக்கிரபிம், யோர்தானின், அக்கோர், எபூசியரின், பாலாவுக்கு, சிக்ரோனை, எபிரோன், தாக்கி, நிலம், நீரூற்றுகளையும்

## அறிவை வளர்ப்போம் - 135 விடைகள்

1. தொல்காப்பியம் 2. சுவாமி விபுலானந்தர் 3. வில்லியம் ஹார்வே
4. புதன் 5. ரென்னிஸ் 6. மணியை கண்டேன்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- நே. டிலக்ஷன்
  101/10, 4ம் குறுக்கு,
  மாமாங்க வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.
- செவோன்,
  இல. 32, புது முகத்துவார வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்**

- சு.டி. சதுசிகா,
  திரேசாள் கன்னியர் மடம்,
  சின்ன உப்போடை,
  மட்டக்களப்பு.
- ந. கீகன் போல்,
  25A, 3ம் குறுக்கு வீதி,
  இருதயபுரம்,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 87 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**
க. அபராஜிதன்,
இல. 59/1, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**
ஓ. அக்ஷியா,
இல. 32, புது முகத்துவார வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

**மூன்றாம் பரிசு - 200/=**
க. ஷப்திகா,
இல.145, 8ம் குறுக்கு,
திராய்மடு,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மனித உரிமைகள் ஆண்டு
நிறைவு விழா – கல்முனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org